DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No.250/2023 |
| Police Station | Manamadurai PS |
| Deposition of Witness for | LW.1/PW.1 |
| Name | பாலகிருஸ்ணன் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**Accused Present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 03.03.2025 at 12.55p.m

**முதல் விசாரணை:**

நான் மதுரை மேலபனங்காடியில் வசித்து வருகிறேன். நான் கரும்பு ஜீஸ் கடை வைத்துள்ளேன். எதிரி செல்லகண்ணனை எனக்கு தெரியும் எனது உடன்பிறந்த அக்காவின் மகன் ஆவார். விருதுநகர் மாவட்டம் பார்த்திபனூரார் அருகில் உள்ள வேலாநதி கிராமத்தில் உள்ள எனது விவசாய நிலத்திற்கு பயிர் காப்பீடு செய்ய வேலாநதிக்கு சென்றேன். 23.11.2022 அன்று பிற்பகல் 3 மணியளவில் நான் எனது இருசக்கர வாகனத்தில் மானாமதுரை ஆனந்தவள்ளியம்மன் கோவில் அருகே உள்ள அய்யப்பன் ஆசாரி பட்டறையில் அருவாள் செய்வதற்காக சென்றேன். அன்று அம்மாவாசை என்பதால் அருவாள் அடிக்கமாட்டேன் என்று கூறிவிட்டார்கள். அதன் பின்பு நான் மதுரை செல்வதற்காக பிற்பகல் 3.30 மணியளவில் நான் மானாமதுரை அண்ணாசிலை அருகில் உள்ள வேகதடையை தாண்டி இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த போது எனக்கு பின்னால்இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி செல்லக்கண்ணன் என்னை மிதித்து தள்ளிவிட்டார் அதில் நான் முன்னால் நின்ற

டாடா ஏஸ் வாகனத்தில் மோதி எனக்கு இடதுகால் இரண்டாக முறிந்துவிட்டது தலையிலும் காயம் ஏறபட்டது. அதன்பிறகு அங்கிருந்த நபர்கள் என்னை ஆம்புலன்சில் ஏற்றி என்னை சிவகங்கை



அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அதன்பிறகு அங்கிருந்த மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அதன்பிறகு அங்கிருந்த மேல்சிகிச்சைக்காக மதுரை தேவதாஸ் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் மதுரை அரசு மருத்துவமனையில சிகிச்சையில் இருந்த போது மானாமதுரை காவல் நிலைய காவலர் என்னிடம் வந்து விசாரணை செய்தார் அதன்பிறகு நான் தேவதாஸ் மருத்துவமனையில் இருந்த போது என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்து கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி திறந்த நீதிமனறத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி,
மானாமதுரை.